உ

சிவமயம்



# கொழும்பு முகத்துவாரம்
# ஸ்ரீமத் அருணாசலேஸ்வர தேவஸ்தான
## பிரதம குரு
## பிரம்மஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் கார்த்திகேயக் குருக்கள்
## அவர்களின்
## சிவபதப்பேற்றின் நினைவு மலர்

**10-02-2007**

SL/PR

உ

சிவமயம்



ஆதியாய் நடுவுமாகி யளவிலா அளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியாநிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

உ

சிவமயம்



அன்னை மடியில்
**01-10-1921**

அருணசிவன் அடியில்
**29-01-2007**

# தெய்வத்திரு

# பிரம்மஸ்ரீ. குமாரசாமிக் குருக்கள் கார்த்திகேயக் குருக்கள்

## திதி வெண்பா

ஆண்டுவிய வதனிற்றை யருந்திங்கள் பதினைந்து
பூண்ட துவாதசி பூர்வத்தில் - வேணியனார்
கார்த்திகேயக் குருக்கள் களிப்புடனே போயினான்
ஆர்க்குந் துயர்ப்பிறவி யகற்றி

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத் தலைவரும், கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீமத் அருணாசலேஸ்வர தேவஸ்தான பிரதம குருவுமான தெய்வத்திரு. கு. கார்த்திகேய குருக்கள் அவர்கள் எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகவும், வழிகாட்டியாகவும் அன்பும், பாசமும் நிறைந்த கணவனாகவும், அன்புடன் அரவணைத்த தந்தையாகவும் அறிவூட்டிய குருவாகவும், பாசமுள்ள மாமாவாகவும், பாசமிகு தாத்தாவாகவும், சைவத் தமிழ் மக்களுக்கு சேவைசெய்யும் தொண்டராகவும் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து ஐயாவின் பாத கமலங்களுக்கு இம்மலரை காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

கமலாபதி வந்தியாய: கார்த்திகேயாய மங்களம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இங்ஙனம்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்

## வாழ்க்கை வரலாறு

சிவபூமியாம் ஈழமணித்திருநாட்டின் வடபால் அதன்ன சிரமென விளங்கும் யாழ்ப்பாணத்தின் வளமிகு வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடியில் சீரும் சிறப்புடனும் வாழ்ந்த குமாரசாமிக்குருக்கள், நாகரத்தினம் அம்மா தம்பதியினரின் தவப்பயனாக இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். அவர்களுக்கு முறையே இரத்தின சபாபதி ஐயர், கார்த்திகேய ஐயர் எனப் பெயரிட்டு உரிய வயதில் உபநயனமும் செய்வித்து, கல்வி ஊட்டி வளர்த்தனர். அவர் பாடசாலைக்கல்வியுடன் வேத சிவாகமங்களையும் கற்றுணர்ந்தார். இளம் பராயத்தில் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கிய கார்த்திகேய ஐயர் தனது உயர்கல்வியை முடித்துக்கொண்டு தலைநகர் கொழும்பில் பொது வேலைத் திணைக்களத்திலும் காப்புறுதி கூட்டுத்தாபனத்திலும் பணியாற்றினார்.

ஸ்ரீமத் அருணாசலேஸ்வர தேவஸ்தானத்தின் அப்போதைய பிரதம குருவாக இருந்த சோ. ஸ்ரீநிவாச சர்மாவின் புதல்வி சிவகாம சுந்தரி அம்மாவை 1948இல் கரம்பற்றினார். இவர்களின் தவப்பயானக இராதகிருஷ்ணன், சுபாஷினி, செந்தில் குமரன், குருகலா, குருஆனந்தி, குருமூர்த்திவதனா ஆகிய செல்வங்களைப் பெற்றனர். இவர்களுக்கும் உரிய பராயம் வர முறையே ராஜேஸ்வரி, கணேசமூர்த்தி, திரிபுரசுந்தரி, ரவீந்திரன், மகேஸ்வரன், சோமசுந்தரம் ஆகியோரை மணம்முடித்து வைத்தார். இவர் தனது இல்லம், தனது குடும்பம் என்று இல்லாமல் சமூகத்திற்கும் தேவையான பணிகளை முழுமனதுடன் செய்தார். தனது மாமனார் சோ. ஸ்ரீநிவாச சர்மா அவர்களின் சிவபதப்பேற்றின் பின் 1975 முதல் தன்னை முழுமையாக ஸ்ரீ அருணாசலேஸ்வரருக்கு அர்ப்பணித்தார். அக்காலத்தில் சாகம்பரி தேவிக்கு ஓர் ஆலயத்தை புதிதாக நிர்மாணம் செய்தார். ஆலயவளர்ச்சியில் அக்கறைக்கொண்டு அதனை புதுப்பொலிவுடன் நிர்மாணித்து 1992 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் செய்வித்து மகிழ்ந்தார்.

ஆலயத்திற்கு வரும் அன்பர்களின் குறைகளை கேட்டு, அவர்களுக்கு ஏற்ப ஆறுதல் வார்த்தைகளைக்கூறி அன்பர்களின் இன்ப துன்பங்களில் கலந்தும், அன்பர்களின் நன்மதிப்பைப் பெற்று வாழ்ந்தார். முகத்துவாரத்தில் உள்ள வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம், முகத்துவாரம் இந்துக்கல்லூரி ஆகியவற்றுடன் இணைந்து எமது சமய வளச்சிக்கும், மாணவர்களின் வளர்ச்சிக்கும் பெரிதும் தொண்டாற்றினார். அத்துடன் இ.கல்லூரி வளாகத்தில் மாணவர்களின் வழிபாட்டிற்கொரு வித்தியா கணபதி ஆலயத்தையும், மட்டகுளியில் களனிகங்காராம எனுமிடத்தில் கல்யாணி கணபதி ஆலயத்தின் கும்பாபிஷேகத்தையும் நடத்தி, நடராஜர் சந்நிதியில் இராஜகோபுரத்தை நிர்மாணித்து மகா கும்பாபிஷேகம் செய்வித்தார்.

ஆலய பரிவார தெய்வங்களான மஹாவிஷ்ணுவிற்கும் 1982ல் ஓர் ஆலயம் அமைத்தார். தனது இறுதிக்காலத்திலும் தான் வழிபாடாற்றும் ஸ்ரீமத் அருணாசலேஸ்வரரின் ஆலயம் மீளப்புனரமைக்கவேண்டும் என்பதில் முழு ஆர்வத்துடன் இயங்கி அதற்கான ஆரம்ப வேலைகளையும் ஆரம்பித்து அடிக்கல்லையும் நாட்டிவைத்தார். அவரின் பணியை நாம் தொடர எம்பெருமான் துணை நிற்கவேண்டும்.

முகத்துவாரம் களனி கங்கா சகரசங்கமத்தில் அருளாட்சி புரியும் சுவர்ணாம்பிகா சமேத அருணாசலேஸ்வரர் திருவுளம் ஐயாவின் தொண்டு இப்புவிக்கு போதுமென்று தன்னுள் அணைத்துக்கொண்டார்போலும்.

மண்ணுலகில் பிறந்து நும்மை வாழ்த்தும் வழிஅடியார்
பொன்னுலகம் பெறுதல் தெண்டனேன் இன்று கண்டுகொண்டேன்
என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாக்கிற்ககைமய எம் ஐயாவும்
அருணாசலேஸ்வரரின் பாதகமலங்களில் ஆனந்தித்திருக்கப்
பிரார்த்திக்கின்றோம்.

**சாந்தி! சாந்தி! சாந்தி!**



# CONDOLENCE MESSAGE

I the caretaker of Sri Arunachaleswarar temple Mutwal, Colombo 15. Express my heartfelt sympathetic condolence over the death of Sivasri C. Karthikesukurukkal, which occurred on the 29th January 2007 at Mutwal Colombo 15.

During his period, he was very honest, polite kindness, helping to every one and worked hard for the progress and development of our temple.

Although he passed away from this world' still remaining in my heart due to his genuine long services and reputation.

His death is a great loss of the society and public who were around of him.

We pray his soul will reach to the foot of Lord Arunachaleswara.

Mahadeva Balakumaran &
Family

உ

சிவமயம்

# மௌனமென்பது மோனவரம்பு

ஸ்ரீமத் அருணாச்சலேஸ்வர தேவஸ்த்தான பிரதமகுரு சிவஸ்ரீ.கு. கார்த்திகேயக்குருக்கள் மறைவு கேட்டு கலங்காதார் யாருமில்லை. அன்னாரின் சிவாலயக் கிரியைகள் அறவழியும் அருளன்பும் பெரும் பேறும் அமைந்த திருவருளே. ஆச்சார்ய குணங்கள் அமைந்த குருமார் வரிசையில் குருக்கள் ஐயாவுமொருவராவார். அன்னாரின் தனிப்பண்பு சிலவுண்டு பிறர்தூற்றல்இல் தற்பெருமைபேசல், விருப்புவெறுப்பு குறைதல் நிறைதல் என்பவையின்றி தாமரையிலையில் நீர்த்துளிபோல் வாழ்ந்தமகான். எவருடனும் கோபக்குணம் வஞ்சம் குறஉள பேசாத குருச்சித்தர். இன்ப துன்பங்களை இணையாக நினைக்கும் உத்தமர் அன்னாரின் குணத்தொண்டு ஆர்வமுடன் மக்கள் அறிந்து நடப்பீர்களாக. அல்லல் நீங்குமே அவனியில் வருவதும் புவனம்போவதுமையனருளே.

முருகன் சோதிடநிலையம்

சிவஸ்ரீ.எஸ். சந்திரசேகரகுருக்கள்



உ

சிவமயம்

# அகில இலங்கை சிவப்பிராமண சங்கம்

සමස්ත ලංකා ශිව බ්‍රාහ්මණ සංගමය

ALL CEYLON SIVABRAHMANA SANGAM

(Established 1957)

கொழும்பு, முகத்துவாரம், ஸ்ரீ அருணாசலேஸ்வரர் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ. கு. கார்த்திகேயக் குருக்கள் அவர்கள் சிவபதமடைந்தமையிட்டு அகில இலங்கைச் சிவப்பிராமண சங்கம் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றது.

எமது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்களுள் குருக்கள் அவர்களும் ஒருவர் ஆவார். சிவஸ்ரீ. கு. கார்த்திகேயக் குருக்கள் அவர்களின் புதல்வர்கள் எமது சங்கப் பாடசாலையின் பழைய மாணவர்களாவர். மாணவர்களாக இருந்த காலத்தில் வேத சிவாகமங்களை நன்கு கற்று வந்துள்ளனர். எனவே எமது சங்கத்திற்கும் குருக்கள் அவர்களின் குடும்பத்திற்கும் ஒரு தொடர்பு நெடுங்காலமாகவே இருந்து வருகிறது.

அவ்வாறான குருக்களின் மறைவு ஒரு பேரிழப்பாகும். அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

சிவஸ்ரீ. கு. கார்த்திகேயக் குருக்கள் அவர்களின் ஆத்மா சாந்தியடைவதாக.

பா. சண்முகரத்தின சர்மா
தலைவர்

சோ. குஹானந்த சர்மா
காரியதரிசி

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்


# வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம்
# උතුරු කොළඹ හින්දු පරිපාලන සංගමය
# Colombo North Hindu Paripalana Sangam

**40, A, Temple Road, Colombo 15, Sri Lanka. Tel: 011-2524308, 4610132**


## அனுதாபச் செய்தி

**வட கொழும்பு இந்து மக்களின் சமய, சமூக ஆத்மீக மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டுள்ள எமது சங்கத்தின் காப்பாளராகவிருந்து, எமது அறப்பணிகளில் அன்னாரது அளப்பரிய பங்களிப்பை நன்றியுணர்வுடன் நினைவு கூறுகின்றோம்.**

**பொன் விழாவைக் கடந்த எமது சங்க வரலாற்றில் அன்னாரது குடும்பத்தினரின் பங்களிப்பு மகத்தானது.**

**எல்லாம் வல்ல ஸ்ரீமத் அருணாசலேசுவருடைய திருவடிகளில் அன்னாரது ஆத்மா சாந்தியடைவதாக.**

**அன்னாரின் மறைவுக்கு முன் எம்மையெல்லாம் அழைத்து கோயிலின் திருப்பணி வேலைகளை ஒப்படைத்து அதற்கான அத்திவாரக்கல்லை நாட்டி ஆரம்பித்து வைத்த அவருடைய திருப்பணி வேலைகளை நிறைவேற்றி வைப்பதே நாம் அன்னாருக்கு செலுத்தும் ஆத்மார்த்த அஞ்சலியாகும்.**

**இப்படிக்கு**
S.P. சாமி
**தலைவர்**
**வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம்**




# COLOMBO HINDU COLLEGE - MUTWAL
# கொழும்பு இந்துக் கல்லூரி - முகத்துவாரம்
# කොළඹ හින්දු විදුහල - මෝදර

**Principal : Miss. P. Y. Murugesu** (S.L.P.S-1)
B.A (Hons), Dip. in. Edu, P.G.D.E.M.

154, Muthuwella Mawatha,
Colombo - 15. Tel : 2526938
.................................200....


## அதிபரின் இரங்கல் செய்தி!

கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீமத் அருணாசலேஸ்வர தேவஸ்தான பிரதமகுரு கு.கார்த்திகேயக் குருக்கள் அவர்கள் 2007ஆம் வருடம் தைத்திங்கள் 29ம் நாள் இரவு சிவபதமடைந்தார் என்ற செய்தி எம்மை ஆறாத்துயரத்தில் மூழ்கச்செய்தது. எமது பாடசாலையையும் ஸ்ரீ வித்யா கணபதி ஆலயத்தையும் உருவாக்குவதில் சிவாச்சாரியர் தம்பதியினர் எத்தகைய பங்களிப்பை நல்கினர் என்பதை செவிகுளிர அவர்கள் வாயால் உரைப்பதை கேட்கும் அதிஷ்டம் பெற்றவர்களில் நானும் ஒருவர். 2002ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கல்லூரியின் வெள்ளிவிழா மலரில் முதன் முதலாக திரு.கு.கார்த்திகேயக் குருக்கள் அவர்களின் ஆசிச் செய்தியைப் பார்த்தேன். சைவம், சைவ ஒழுக்கம், அறிவு, ஞானம், மனிதநேயம், சிவாச்சாரிய வாழ்வு என்பன ஒருங்கே திகழும் சிவகாமசுந்தரி அருணாசலேஸ்வரராக அவர் எம் முன் திகழ்ந்தார். எமது பாடசாலையின் முதலாவது ஆரம்பப்பிரிவு கலைவிழா நிகழ்வில் மங்கள விளக்கு ஏற்றி என்னையும் பாடசாலை நிகழ்வையும் மாணவர்களையும ஆசிரியர்களையும் ஒளியூட்டி பிரகாசிக்கச் செய்தார்.

2003ம் ஆண்டு ஸ்ரீ வித்யா கணபதி ஆலய கும்பாபிஷேக நிகழ்வுகள், கணனி நூல்நிலைய அடிக்கல்நாட்டு விழ, திறப்புவிழா, லியோ கழக அங்குரார்ப்பணவிழா, ஆகிய விழாக்களில் கலந்து சிறப்பித்தார். எமது ஆலயத்தில் அவர் நிகழ்த்திய நவராத்திரி விழாக்கள், மாதாந்த சதுர்த்தி , வருடப்பிறப்பு சிவராத்திரி , பிரதோஷம் ஆருத்திரா தரிசனம் ஆகிய பூசைகள் ஆராதனைகள் இன்றும் எம்முன் நிழலாடுகின்றது. நவராத்திரி விழா போட்டிகளின் பரிசளிப்புக்கு பரிசுப் பொருட்களை தந்துதவியமையை இன்றும் மறக்க முடியாது. தான் வித்யா கணபதி ஆலயம் உருவாக அர்ப்பணிப்புடன் ஈடுபட்டது போல தன்னுடைய குடும்ப வாரிசையும் வித்யாகணபதியின் ஆலய கிரியைகளில் ஈடுபடுத்தியமையும் அவருடைய செயல்களில் அளப்பரியது ஆகும்.

1976ம் ஆண்டு காலப்பகுதியில் எமது பாடசாலையை தற்போது அமைந்திருக்கும் இடத்தில் அமைப்பதற்கும், 2001ம் ஆண்டில் • வித்யா கணபதி ஆலயத்தினை அமைப்பதற்கும் குருக்கள் ஐயாவின் பங்கு அளப்பரியதாகும். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பர். வருடத்தில் சில நாட்கள் மட்டுமே முகத்துவாரம் சிவன்கோவில் வழிபாட்டிற்கு என ஒதுக்குவேன். 2007ம் வருடம் தை மாதம் 1ம் திகதி மாலை பிரதோஷ பூஜையின் போது சகஸ்ரநாம அர்ச்சனை செய்து குருக்கள் ஐயாவின் ஆசியைப் பெற்றேன். பிரதோஷ திருவிழா எப்படி இருந்தது என ஐயா வினவினார். சிவதரிசனம் கிடைத்து விட்டது என எண்ணினேன். இவ்வாறான பிரதோஷ பூஜையை இதற்கு முன்னர் ஒருபோதும் பார்க்கவில்லை. நீண்ட காலமாக பிரதோஷ பூஜையில் ஈடுபடும் ஐயாவிற்கும், அருணாசலேஸ்வர அடியார் திருக்கூட்டத்திற்கும் எவ்வித இடரும் வராது என உணர்ந்தேன். என் மனம் நா பல தடவை சுந்தரமூர்த்தி சுவாமிகளின் "ஆலந்தானுகர்ந்து அமுது செய்தானை..." என்ற தேவாரத்தை மீண்டும் மீண்டும் உச்சரித்தது.

ஆருத்ரா தரிசனத்தின் பொருட்டு காலை 5.00 மணிக்கே ஆலயம் சென்றேன். ஆலயபூசை ஒழுங்கும் கிரியைகளும் என்னால் மறக்க முடியாது. திருநாவுக்கரசு சுவாமிகளின் மாதர்பிறைக் கண்ணியானை என்ற தேவார திருவையாற்றுக் காட்சியினை மனம் மீண்டது. அம்மை அப்பனாக அம்மாவையும் ஐயாவையும் கண்டேன். சிவபக்தருக்கும் பக்தரான ஐயா அவர்கள் திருவெம்பாவை பாடிய அடியவர்களைக் கௌரவித்தமையை பார்த்து மெய் சிலிர்த்தேன். காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் சிவநடன காட்சியில் என் மனம் இலயித்தது.

நேர்கொண்ட பார்வையும் எல்லோரையும் வசீகரிக்கும் தன்மையும், பேச்சால் அனைவரையும் கவரும் தன்மையும் கொண்ட இவர் வடகொழும்பில் இந்துகலாசார சூழலை வளம்படுத்துவதில் பெரும்பங்காற்றியமையை முகத்துவாரம் இந்துக்கல்லூரியின் அதிபர் என்ற வகையில் என்னால் அவதானிக்க முடிந்தது.

**ஸ்ரீகுரு பிரம்மா குரு விஷ்னு**
**குரு தேவோ மஹேஸ்வரா:**
**குரு சாட்சாத் பரப்பிரம்மா**
**தஸ்மே ஸ்ரீ குருவே நம:**

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

– செல்வி.பு.யோ.முருகேசு
அதிபர்



உ
சிவமயம்
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

**கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம்**
**කොළඹ සයිව මුන්නෙට්ට සංගම්**
**COLOMBO SAIVA MUNNETTA SANGAM**
Bankers: BANK OF CEYLON (Metropolitan Branch) INDIAN OVERSEAS BANK

Regd பதிவு } S. 258

101/70, KEW ROAD, COLOMBO - 2.

Branch Societies: United Kingdom / Peliyagoda / Chilaw. ..........................200.......

## அஞ்சலி

**அமரத்துவமடைந்த சிவஸ்ரீ கு. கார்த்திகேசக் குருக்களுக்கு அஞ்சலி செலுத்தும் இவ் வேளையில் அன்னாரின் புகழ் சில சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.**

**அரசவேயைில் தன்னை அர்ப்பணித்த அமரரவர்கள் 1948 ஆம் ஆண்டு தொடக்கம் பொது வேலைத் திணைக்களத்திலும் பின்பு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலும் கடமையாற்றி வந்தார். 1948ஆம் ஆண்டில் செல்வி சிவகாமி சுந்தரி ஸ்ரீநிவாசக் குருக்களை மணந்து திருமண பந்தத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். திருமதி. சிவகாமசுந்தரி மிகவும் துடிப்பான சக்தியாக அமரரவர்களுக்குக் கிடைத்த பொக்கிஷமாவார். சிவனுக்கு உந்து சக்தியாக இருக்கும் உமாதேவியைப்போல சிவஸ்ரீ கார்த்திகேயக் குருக்களுக்கு சிவகாமசுந்தரி இருந்துவந்ததில் எந்த வித வியப்புமில்லை.**

**அமரரவர்கள் சாந்தமே வடிவான ஓர் உதாரண பிராமணராக திகழ்ந்து வந்தார். அவர் திருமண பந்தத்தில் இணைந்ததன் பின்பு தனது அரச சேவையுடன் தனது மாமனார் சோ. ஸ்ரீநிவாசக் குருக்கள் பொறுப்பேற்று நடத்திவந்த ஸ்ரீமத் அருணாசலேஸ்வரா ஆலயத்திலும் குருவாகவும் சேவைகள் செய்துவந்தார். 1975ம் ஆண்டு தனது மாமனார் சிவனடி சேர்ந்த பின்பு இவ்வாலயத்தின் முழுப் பொறுப்புக்களையும் ஏற்று இன்று இறைவனடி சேரும்வரை ஆலயத்தின் பிரதம குருவாக இருந்து ஈசனுக்குப் பணிவிடைகள் செய்து மகிழ்ந்தார்.**

தனது ஆலய சுற்றாடலில் அமைப்பெற்ற வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் அரும்பாடு பட்டு வந்ததுடன் முகத்துவார இந்துக் கல்லூரியில் அமைப்பட்ட விநாயக ஆலயத்துக்கும் பாடசாலையின் முன்னேற்றத்துக்கும் பாடுபட்டு வந்தார். முகத்துவாரத்தில் அமைப்பெற்ற இறுதிக் கடமைகள் செய்யும் அந்தியேட்டி மடத்தின் பொறுப்புக்களையும் ஏற்று அதனை சிறந்த முறையில் நிர்வகித்துவந்தது எல்லா சைவ மக்களின் நினைவில் நிற்கும்.

1998ஆம் ஆண்டு தொடக்கம் எமது சைவக் கொடியாம் நந்திக் கொடியின் பாவனையை மக்களிடையே திரும்பவும் ஏற்படுத்துமுகமாக எமது சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்புத் தரும் வகையில் தனது ஆலய முன்றலில் ஓர் தனிக்கொடிக் கம்பமமைத்து நந்திக் கொடியினை ஏற்றி பெருமை சேர்த்தவர். இக் கொடிக்கபம்பதில் அன்று தொட்டு இன்றுவரை இடபக்கொடி பறப்பதைக் காணலாம்.

அப்படியான சைவப் பற்றும், தமிழ் பற்றும் கொண்ட சிவாசாரியார் ஒருவரை சைவ உலகம் இழந்து நிற்கின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் சிவனடி சேரவும் எனது சார்பாகவும், கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் சார்பாகவும், பிரார்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சிவநெறிச் செல்வர்
சி. தனபாலா (ஜே.பி.)
தர்மகர்த்தா
கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம்



# அறவழியில் வாழ்ந்து நின்ற பெரியார்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் கலந்து கொண்டவரே! எமது மதிப்பிற்குரிய சிவஸ்ரீ. கார்த்திகேய குருக்கள் ஐயா அவர்கள் கொழும்பு 15, மோதர ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆலய பிரதம குருவாக நீடிய காலம் நேர்மையுடனும், பக்தியுடனும் இனிது பணியாற்றிய பெருமகனார் கடந்த முப்பது ஆண்டுகள் ஐயா அவர்களை நன்கு அறிந்திருந்தேன். பல சந்தர்ப்பங்களில் பெறுதற்கரிய பேறாக அவர்தம் நல்லாசிகளைப் பெற்றிருந்தேன். செய்வதற்கு அருமையான தர்ம செயல்களைச் செய்துவந்த பெரியார் எல்லா உயிர்களிடத்தும் அன்பு வைத்து செம்மையான அருளை மேற்கொண்டு அறவழியில் வாழ்ந்து நின்ற அந்தணப் பெரியார் இவராவார். ஒழுக்கத்தில் நிலைத்துநின்று இவ்வுலகப்பற்றை விட்டு இறைவன் திருமென்மலர்ப் பாதங்களை,ச் சென்றடைந்தார்.

செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்துவந்த பிராமண உத்தமப் பெரியார் இவர்தம் இழப்பு இந்துக்களால் ஜீரணிக்க முடியாத பேரிழப்பு எனக்கூறி அவர்தம் ஆத்ம சந்திக்காக எம்பெருமான் திருவடிகளைப் பணிவோமாக.

பேரன்பர்
கலாநிதி. வை. கங்கைவேணியன் J.P. (W.I)
கொழும்பு மாநகரசபை உறுப்பினர்
தலைவர்:- அகில இலங்கை கண்ணதாசன் மன்றம்

# ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றேன்

கொழும்பு 15, மோதர ஸ்ரீ அருணாசலேஸ்வரர் சிவன் கோவிலின் பிரதம குருவாக விளங்கிய சிவஸ்ரீ. கார்த்திகேய குருக்கள் அவர்கள் தம் மறைவு இந்துக்களுக்கு மாபெரும் பேரிழப்பாகும். அன்பு, அடக்கம், காருண்யம் மிக்க ஒரு பண்பாளராக தனது வாழ்நாள் பூராகவும் வாழ்ந்து நின்றார்.

மெலிந்த நெடிய தோற்றத்துடன் எந்நேரமும் புன்சிரிப்புடனேயே காணப்படுவார். தலைநகர் கொழும்பு வாழ் இந்துப் பெருமக்களால் நன்கு மதிக்கப்பட்ட ஒரு பெரியார். இவரது காலத்தில் ஆலயம் மிக மிகப் போற்றதற்குரிய வளர்ச்சியைக் கண்டது என்பது பேருண்மை. செல்வந்தர்கள் முதல் கீழ் மட்டத்திலுள்ள மக்கள் அனைவரதும் பாராட்டினைப் பெற்ற பெருந்தகையின் ஆத்மா எம் பெருமான் திருவடி நிழலில் சாந்தி பெறப் பிரார்த்திப்போமாக.

அன்பர்

ஏ.கே.எம்.எஸ். இராஜேந்திரன் ஜே.பி.யூ.எம்.

பிரதி முதல்வர்

கொழும்பு மாநகர சபை



ஈழத்திருநாட்டின் இந்துசமய எழுச்சிக்கும் வடகொழும்பு வாழ் இந்து சமய மக்களின் அறநெறி வளர்ச்சிக்கும் பாரிய பங்களிப்பை வழங்கிய அமரர் சிவஸ்ரீ. கு. கார்த்திகேய குருக்களின் பணி அளப்பரியதாகும்.

இந்துசமய மக்களுக்கு ஓர் வழிகாட்டியாக கொழும்பு 15 ஸ்ரீமத் அருணாசலேஸ்வரர் ஆலயத்தின் பிரதம குருவாக கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக தனது பணியை சிறப்பாக ஆற்றி வந்ததுடன் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கும் மற்றும் ஆலயத்தில் பூஜைகள், திருவிழாக்கள் என்பன உரிய காலங்களில் இடம்பெறுவதற்கு பிரதம கருத்தாவாக குருக்கள் ஐயா முன்னின்று பணியாற்றினார். அத்துடன் இந்துசமய மக்களிடையே சமய விழிப்புணர்சியையும், அறநெறி பணிகளையும் வளர்ப்பதிலும் அளப்பரிய சேவையாற்றியுள்ளார். மற்றும் எமது வட கொழும்பு இந்து இளைஞர் சங்க வளர்ச்சிக்கும் எமது ஆன்மிகப்பணிகளுக்கும் குருக்கள் ஐயா பாரிய உதவிகளை நல்கி எமது பணியை மேன்மை அடைய உதவியுள்ளார்.

குருக்கள் ஐயாவின் இழப்பு அன்னாரின் குடும்பத்துக்கு மட்டுமல்லாமல் இந்துசமய மக்களுக்கும் ஏற்பட்ட பெரு இழப்பாகும். அன்னாரின் ஆத்மா ஸ்ரீமத் அருணாசலேஸ்வரர் பெருமானின் பாதாரவிந்தங்களை அடைய பிரார்த்திப்போமாக.

ச. யோகராஜா

உறுப்பினர், கொழும்பு மாநகர சபை

## குமாரசாமி குருப்பியோ நம:

நாதமணி பேரிகைவாத்
தியங்கள் ஆர்ப்ப
நாற்றிசையும் அமரர்மலர்
மாரி தூர்ப்ப
ஓதுசதுர் வேத ஒலி
விண்மண் போர்ப்ப
உயர்குரவர் ஆசிமொழி
உவந்து பூப்ப
கோதி தமிழ் மறையோது
வோர்கை கூப்ப
கொழும்பு நகர் முகத்துவா
ரத்தின் மேவி
ஆதித்தன் ~ கோயில்மர்ந்
தருளுங் கோவின்
அருங்குமர கார்திகேய!

இந்த பெருமைக்குரிய சிவஸ்ரீ கு. கார்த்திகேய குருக்கள் அவர்கள் எமது அருமை தாத்தா ஆவார். அவர் சிவதொண்டு மட்டுமில்லாது சமூகதொண்டுகள் புரிந்தவர். அவர் எங்களுக்கு தாயுமானவராக இருந்து எங்களை வழி நடத்தினார். மனதளவில்கூட யாரையும் புண்படுத்த யோசிப்பார். எங்களின் சகல முன்னேற்றத்திற்காக பாடுபட்டவர். எங்களின் ஒவ்வொரு செயலிலும் அவரின் ஆர்வம்தான் இருக்கின்றது. அவர் சிவபதமடைந்தாலும் எங்களின் ஒவ்வொரு நல்ல செயலிலும் எங்கள் பக்தியிலும், வாழ்வின் முன்னேற்றத்தின் பாதையிலும் இருந்து நல் வழி நடத்துவார்.

**பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு**
**பலகோடி நூராயிரம்**
**மல்லாண்ட தின்கோன் மணிவண்ணா உன்**
**செவ்வடி செவ்வித்திருகாப்பு.... என்றும்**
**நீங்கா நினைவுடன் - குருநாதன், குருஜனனி, பத்மபிரியா**



**LOVING GRANDPA**

I really miss my grandpa. I was very upset when I heard the tragic news. He was the best . I'm really in shock, I hope his sdoul will rest in peace forever, he will never leave my heart. I am praying for him

**Guru Baran, Guru Charan**

**OUR LOVING GRANDPA**

Is a great person. He leads and encouraged us in every good attitude. We miss him a lot. He lives in our heart forever and ever.

**Gurunathan, Guru Swaminaathan &**
**Guru Lakshmi**

**LOVING GRANDPA**

My grandpa was the best, he made us laugh when we were bored. He shured and laughed with us. He was one of a kind. I hope his soul will forever rest in peace

**Loving Gayathri**

**LOVING GRANDPA**

When I heard about the tragic news that suddenly happened to you, I was in shouck. Each tear shedded for you contained love, I shall forever shed my tears, but my love will never end. Each day I pray for you that your soul will rest in peace forever.

**Loving,**
**Guruprased , Aparna**

**GRANDPA**

He was kind made me laugh and when I heardd of his death. I was very upset and so where my family. I really liked my grandpa he was the best. Is hope he rests in peace forever

**Guruh Rooban, Keerthana,**
**Rasiga**

## இரங்கற்பா

உற்றாரும் பெற்றாரும் முறுதுணையு மூராருங்
கற்றாவின் மனம்போலக் கலங்கியழப் பற்றாதான்
கண்டுலகிற் பணிசெய்யப் பெரும்பதிக்கும் போயினையே
மண்டலந்தில் காண்போமோ வினி

## சிஷ்யர்களாதங்கம்

அரனே சிவனே யண்ணா மலையே
பரமன் பணிசெய்யப் பகர்ந்தாயே – குருவே
போதம் நிறை பணியிலென் பிளையொன்றுங்
கூறாதேநாத னெனச் சொல்லுமே நா.

அருங்கிரியை யுடனே யறிவுரைகள் கூறியே
பெருங்கிரியை செய்யப் போவென்றாய் – மறைக்குருவே
நைமித்திய நல்லுத்தர நற்கிரியை செய்வேனை
வைத்தியென யில்லையே வாக்கு.

தெய்வப்பணி குருவின்பணி திருவடியார் தம்பணிக
ளுள்ளன்புடனே செய்தேனே நையமனங்
கட்டுப்படாது கவஉல கேட்பேனோ
சுட்டாவெனும்சொல்லின் சுவை.



## லிங்காஷ்டகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரம்மமுராரி | ஸுராச்சித | லிங்கம் |
| | நிர்மலபாஷித | ஸோபித | லிங்கம் |
| | ஜந்மஜதுக்க | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 2. | தேவமுனி | ப்ரவரார்சித | லிங்கம் |
| | காமதஹம் | கருணாகர | லிங்கம் |
| | ராவண | தர்ப்பவிநாசன | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 3. | ஸர்வஸுகந்தி | ஸுலேபித | லிங்கம் |
| | புத்திவிவர்த்தன | காரண | லிங்கம் |
| | ஸித்தஸுராஸுர | வந்தித | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 4. | கநகமஹாமணி | பூஜித | லிங்கம் |
| | பணிபதிவேஷ்டித | ஸோபித | லிங்கம் |
| | தக்ஷஸுயக்ஞ | விநாசன | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 5. | குங்குமசந்தன | லேபிதச | லிங்கம் |
| | பங்கஜஹார | ஸுசோபித | லிங்கம் |
| | ஸஞ்சிதபாப | விநாசன | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 6. | தேவகணார்ச்சித | ஸேவித | லிங்கம் |
| | பாவய பக்தி | ஸுசோபித | லிங்கம் |
| | திநகரகோடி | ப்ரபாகர | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 7. | அஷ்டதளோபரி | வேஷ்டித | லிங்கம் |
| | ஸர்வஸமுத்பவ | காரண | லிங்கம் |
| | அஷ்டதரித்ர | விநாசித | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாவிச | லிங்கம் |
| 8. | ஸுரகுருஸுரவர | பூஜித | லிங்கம் |
| | ஸுரவநபுஷ்ப | ஸதார்ச்சித | லிங்கம் |
| | பரம பரந்தாம | ஆத்மந | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |

லிங்காஷ்டகம் இதம் ஸ்தோத்திரம்
ய:படேத் சிவசந்நிதௌ
சிவலோக மவாப்நோதி
சிவேன ஸஹமோததே

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய
# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமமாகி நின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசனடி போற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்



கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எங்காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவையாறே.
புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட் டைம்மேலுந்தி

பல்வீழ்ந்து நாத்தளர்ந்து மெய்யில்வாடிப் பழிப்பாய வாழ்க்கை ஒழியத்தவம்
இல்சூழிடங் கருதி நின்றீரெல்லாம் இறையே பிரியா தெழுந்தபோதும்
கல்சூழரக்கன் கதறச் செய்தான் காதலியும் தானும் கருதிவாழும்
தொல்சீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே.

நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சா நாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூ நாளும் தலை சுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நா நாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

இன்றுநன்று நாளைநன்று என்றுநின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே.

தந்தையார் போயினார் தாயாரும் போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியால் ஏழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலாம் மையல்கொண் டஞ்சல் நெஞ்சே.

பாவமேவும் உள்ளமோடு பத்தியின்றி நித்தலும்
ஏவமான செய்துசாவ தன்முனம் இசைந்துநீர்
தீபமாலை தூபமும் செறிந்தகைய ராகிநம்
தேவதேவன் மன்னுமூர் திருந்துகாழி சேர்மினே.

# நமச்சிவாயத் திருப்பதிகம்
## (3ஆம் திருமுறை - பதிக எண்: 49)

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பதும்
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்பன் நாம நமச்சி வாயவே.

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே.

இயமன் தூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தான்நினை வார்க்கினி யான்நெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே.

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீக்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

மந்த ரம்மன் பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே.



நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே.

இலங்கை மன்ன னெடுத்த அடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே.

போதன் போதன கண்ணனு மண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாமம் நமச்சி வாயவே.

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே.

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே.

திருச்சிற்றம்பலம்

▲▲▲▲▲▲▲

# திருக்கேதீச்சரத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறைக் கீளும்
கடமார்களி யானைபுரி அணிந்தகறைக் கண்டன்
படஏரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே.

அங்கம்மொழி யன்னாரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே.

கரியகறைக் கண்டன்நல்ல கண்மேலொரு கண்ணான்
வரியசிறை வண்(டு)யாழ்செயும் மாதோட்டநன் நகருள்
பரியதிரை எறியவரு பாலாவியின் கரைமேல்
தெரியுமறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே.

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.

வெய்யவினை யாயஅடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
கையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே.



ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடுள பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே.

அட்டன்அழ காகஅரை தன்மேலராவு ஆர்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்டநன் னகரில்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்னெனை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டுயாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புக ழூரன்னடி தொண்டனுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு லினையே

திருச்சிற்றம்பலம்

▲▲▲▲▲▲▲

## திருவண்ணாமலை

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பொண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே. 1

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவன்மிசை சிறுநுண்டுளி சிதற
ஆமாமம்பிணை யணையும்பொழி லண்ணாமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை யிலரே. 2

பீலிம்மயில் பெடையோடுறை பொழில்சூழ்கழை முத்தம்
சூலிம்மணி தரைமேனிறை சொரியும்விரி சாரல்
ஆலிம்மழை தவழும்பொழி லண்ணாமலை யண்ணல்
காலன்வலி தொலைசேவடி தொழுவாரன புகழே. 3

உதிரும்மயி ரிடுவெண்டலை கலனாவுல கெல்லாம்
எதிரும்பலி யுணலாகவு மெருதேறுவ தல்லால்
முதிருஞ்சடை யிளவெண்பிறை முடிமேல்கொள அடிமேல்
அதிருங்கழ லடிகட்கிட மண்ணாமலை யதுவே. 4

மரவஞ்சிலை தரளம்மிகு மணியுந்துவெள் ளருவி
அரவஞ்செய முரவம்படு மண்ணாமலை யண்ணல்
உரவஞ்சடை யுலவும்புன லுடனாவது மோரார்
குரவங்கமழ் நறுமென்குழ லுமைபுல்குதல் குணமே. 5

பெருகும்புன லண்ணாமலை பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி யணிவாரது பருகிக்
கருகும்மிட றுடையார்கமழ் சடையார்கழல் பரவி
உருகும்மன முடையார்தமக் குறுநோயடை யாவே. 6

கரிகாலன குடர்கொள்வன கழுகாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை யுதையுண்டவை யுருள
எரியாடிய இறைவர்க்கிட மினவண்டிசை முரல
அரியாடிய கண்ணாளொடு மண்ணாமலை யதுவே. 7



ஒளிறூபுலி யதளாடைய னுமையஞ்சுதல் பொருட்டால்
பிளிறூகுரல் மதவாரண வதனம்பிடித் துரித்து
வெளிறூபட விளையாடிய விகிர்தன்னிரா வணனை
அளறூபட அடர்த்தானிட மண்ணாமலை யதுவே. 8

விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில்புக ழோனும்
அளவாவண மழலாகிய அண்ணாமலை யண்ணல்
தளராமுலை முறுவல்லுமை தலைவன்னடி சரணே. 9

வேர்வந்துற மாசூர்தர வெயில்நின்றுழல் வாரும்
மார்பம்புதை மலிசீவர மறையாவரு வாரும்
ஆரம்பர்த முரைகொள்ளன்மின் அண்ணாமலை யண்ணல்
கூர்வெண்மழுப் படையான்நல்ல கழல்சேர்வது குணமே. 10

வெம்புந்திய கதிரோனொளி விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவ னண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுள் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவ ரடிபேணுதல் தவமே. 11

திருச்சிற்றம்பலம்

*****

## திருவண்ணாமலை

பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்க ளெரித்தவன்று மூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின்னிரையோடும்
ஆமாம்பிணைவந் தணையுஞ்சார லண்ணாமலையாரே. 1

மஞ்சைப்போழ்ந்த மதியஞ்சூடும் வானோர்பெருமானார்
நஞ்சைக்கண்டத் தடக்குமதுவும் நன்மைப்பொருள்போலும்
வெஞ்சொற்பேசும் வேடர்மடவா ரிதணமதுவேறி
அஞ்சொற்கிளிக ளாயோவென்னு மண்ணாமலையாரே. 2

ஞாயத்திரளாய் நின்றபெருமான் நல்லஅடியார்மேல்
ஊனத்திரளை நீக்குமதுவு துண்மைப்பொருள்போலும்
ஏனத்திரளோ டினமான்கரடி யிழியுமிரவின்கண்
ஆனைத்திரள்வந் தணையுஞ்சார லண்ணாமலையாரே. 3

இழைத்தஇடையா ளுமையாள்பங்க ரிமையோர்பெருமானார்
தழைத்தசடையார் விடையொன்றேறித் தரியார்புரமெய்தார்
பிழைத்தபிடியைக் காணாதோடிப் பெருங்கைமதவேழம்
அழைத்துத்திரிந்தங் குறங்குஞ்சார லண்ணாமலையாரே. 4

உருவிற்றிகழு முமையாள்பங்க ரிமையோர்பெருமானார்
செருவில்லொருகால் வளையவூன்றிச் செந்தீயெழுவித்தார்
பருவிற்குறவர் புனத்திற்குவித்த பருமாமணிமுத்தம்
அருவித்திரளோ டிழியுஞ்சார லண்ணாமலையாரே. 5

எனைத்தோரூழி யடியாரேத்த இமையோர்பெருமானார்
நினைத்துத்தொழுவார் பாவந்தீர்க்கும் நிமலருறைகோயில்
கனைத்தமேதி காணாதாயன் கைம்மேற்குழலூத
அனைத்துஞ்சென்று திரளுஞ்சார லண்ணாமலையாரே. 6

வந்தித்திருக்கு மடியர்தங்கள் வரமேல்வினையோடு
பந்தித்திருந்த பாவந்தீர்க்கம் பரமனுறைகோயில்
முந்தியெழுந்த முழவினோசை முதுகல்வரைகள்மேல்
அந்திப்பிறைவந் தணையுஞ்சார லண்ணாமலையாரே. 7

மறந்தான்கருதி வலியைநினைந்து மாறாயெடுத்தான்றோள்
நிறந்தான்முரிய நெரியவூன்றி நிறைவருள்செய்தார்
திறந்தான்காட்டி யருளாயென்று தேவரவர்வேண்ட
அறந்தான்காட்டி யருளிச்செய்தா ரண்ணாமலையாரே. 8

தேடிக்காணார் திருமால்பிரமன் தேவர்பெருமானை
மூடியயோங்கி முதுவேயுகுத்த முத்தம்பலகொண்டு
கூடிக்குறவர் மடவார்குவித்துக் கொள்ளவம்மினென்
றாடிப்பாடி யளக்குஞ்சார லண்ணாமலையாரே. 9

தட்டையிடுக்கித் தலையைப்பறித்துச் சமணேநின்றுண்ணும்
பிட்டர்சொல்லுக் கொள்வேண்டா பேணித்தொழுமின்கள்
வட்டமுலையா ளுமையாள்பங்கர் மன்னியுறைகோயில்
அட்டமாளித் திரள்வந்தணையு மண்ணாமலையாரே. 10

அல்லாடரவ மியங்குஞ்சார லண்ணாமலையாரை
நல்லார்பரவப் படுவான்காழி ஞானசம்பந்தன்
சொல்லான்மலிந்த பாடலான பத்துமிவைகற்று
வல்லாரெல்லாம் வானோர்வணங்க மன்னிவாழ்வாரே. 11

- திருச்சிற்றம்பலம் -



## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட் டென்னையோர் உருவ மாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட் டென்னுள்ளம் கோயில் ஆக்கி
அன்பிருத்தி அடியேனைக் கூழாட்கொண் டருள்செய்த ஆரு ரர்தம்
முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக் காக்கைப்பின் போன வாறே.

அங்கத்தை மண்ணுக் காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாயேன் உன்னை
எங்குற்றாய் என்ற போதால் இங்குற்றேன் என்கண் டாயே.

கருவாய்க் கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரரனே.

கருவுற்ற நாள்முத லாகஉன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும் நானுங்கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி ஊரா திருவால வாயா திருவாரூரா
ஒருபற்றி லாமையும் கண்டிரங் காய்கச்சி ஏகம்பனே.

நடலை வாழ்வுகொண் டென்செயதிர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே.

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்தொன் றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டுயிராரும் கடைபோ காரால்
மருவாகி நின்னடியே மறவேன் அம்மான்
மறித்தொருகால் பிறப்புண்டேல் மறவா வண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங் கூரா
செம்பொன் ஏகம்பனே திகைத்திட் டேனே.

ஐயினால் மிடறடைப்புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினால் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தில் இடுவதன்முன் மதியம் சூடும்
ஐயனார்க் காளாகி அன்பு மிக்கு
அகம்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதம்
கையினால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவர் இல்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே.

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தாம் ஆரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமாம் இதற்கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்கும் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பில் இருக்க லாமே.

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.



## திருஅண்ணாமலை – திருக்குறுந்தொகை

வட்ட னைம்மதி சூடியை வானவர்
சிட்ட னைத்திரு வண்ணா மலையனை
இட்ட னையிகழ்ந் தார்புர மூன்றையும்
அட்ட னையடி யேன்மறந் துய்வனோ. 1

வான னைமத்தி சூடிய மைந்தனைத்
தேன னைத்திரு வண்ணா மலையனை
ஏன னையிகழ்ந் தார்புர மூன்றெய்த
ஆன னையடி யேன்மறந் துய்வனோ. 2

மத்த னைம்மத யானையு ரித்தவெஞ்
சித்த னைத்திரு வண்ணா மலையனை
முத்த னைம்முனிந் தார்புர மூன்றெய்த
அத்த னையடி யேன்மறந் துய்வனோ. 3

காற்ற னைக்கலக் கும்வினை போயறத்
தேற்ற னைத்திரு வண்ணா மலையனைக்
கூற்ற னைக்கொடி யார்புர மூன்றெய்த
ஆற்ற னையடி யேன்மறந் துய்வனோ. 4.

மின்ன னைவினை தீர்த்தெனை ஆட்கொண்ட
தென்ன னைத்திரு வண்ணா மலையனை
என்ன னையிகழ்ந் தார்புர மூன்றெய்த
அன்ன னையடி யேன்மறந் துய்வனோ. 5

மன்ற னைம்மதி யாதவன் வேள்விமேல்
சென்ற னைத்திரு வண்ணா மலையனை
வென்ற னைவெகுண் டார்புர மூன்றையுங்
கொன்ற னைக்கொடி யேன்மறந் துய்வனோ. 6

வீர னைவிட முண்டனை விண்ணவர்
தீர னைத்திரு வண்ணா மலையனை
ஊர னையுண ரார்புர மூன்றெய்த
ஆர னையடி யேன்மறந் துய்வனோ. 7


கருவி னைக்கடல் வாய்விட முண்டவெம்
திருவி னைத்திரு வண்ணா மலையனை
உருவி னையுண ரார்புர முன்றெய்த
அருவி னையடி யேன்மறந் துய்வனோ. 8

அருத்த னையர வைந்தலை நாகத்தை
திருத்த னைத்திரு வண்ணா மலையனைக்
கருத்த னைக்கடி யார்புர முன்றெய்த
அருத்த னையடி யேன்மறந் துய்வனோ. 9

அரக்க னையல றவ்விர லூன்றிய
திருக்க னைத்திரு வண்ணா மலையனை
இரக்க மாயென் உடலுறு நோய்களைத்
துரக்க னைத்தொண்ட னேன்மறந் துய்வனோ. 10

திருச்சிற்றம்பலம்
*****
















## திருஅண்ணாமலை – திருக்குறுந்தொகை

பட்டி ஏறுகந் தேறிப் பலஇ(ல்)லம்
இட்ட மாக இரந்துண் டுழிதரும்
அட்ட மூர்த்தியன் ணாமலை கைதொழக்
கெட்டுப் போம் வினை கேடில்லை காண்மினே 1

பெற்ற மேறுவர் பெய்பலிக் கென்றவர்
கற்ற மாமிகு தொல்புக ழாளொடும்
அற்றந் தீர்க்குமண் ணாமலை கைதொழ
நற்ற வத்தொடு ஞானத் திருப்பரே. 2

பல்லி லோடுகை யேந்திப் பலஇ(ல்)லம்
ஒல்லை சென்றுணங் கல்கவர் வாரவர்
அல்லல் தீர்க்குமண் ணாமலை கைதொழ
நல்ல வாயின நம்மை யடையுமே. 3

பாடிச் சென்று பலிக்கென்று நின்றவர்
ஓடிப் போயினர் செய்வதொன் றென்கொலோ
ஆடிப் பாடியண்ணாமலை கைதொழ
ஓடிப் போகும்நம் மேலை வினைகளே. 4

தேடிச் சென்று திருந்தடி யேத்துமின்
நாடி வந்தவர் நம்மையு மாட்கொள்வர்
ஆடிப் பாடியண் ணாமலை கைதொழ
ஓடிப் போம்நம் துள்ள வினைகளே. 5

கட்டி யொக்குங் கரும்பி னிடைத்துணி
வெட்டி வீணைகள் பாடும் விகிர்தனார்
அட்ட மூர்த்தியண் ணாமலை மேவிய
நட்ட மாடியை நண்ணநன்ன காகுமே. 6

கோணிக் கொண்டையர் வேடமுன் கொண்டவர்
பாணி நட்டங்க ளாடும் பரமனார்
ஆணிப் பொன்னினண் ணாமலை கைதொழப்
பேணி நின்ற பெருவினை போகுமே. 7

கண்டச் தான்கறுத் தான்கால னாருயிர்
பண்டு கால்கொடு பாய்ந்த பரமனார்
அண்டத் தோங்குமண் ணாமலை கைதொழ
விண்டு போகுநம் மேலை வினைகளே. 8

முந்திச் சென்றுமுப் போதும் வணங்குமின்
அந்தி வாயொளி யான்றனண் ணாமலை
சிந்தி யாவெழு வார்வினை தீர்த்திடும்
கந்த மாமலர் சூடுங் கருத்தனே. 9

மறையி னானொடு மாலவன் காண்கிலா
நிறையும் நீர்மையுள் நின்றருள் செய்தவன்
உறையும் மாணிபினண் ணாமலை கைதொழப்
பறையும் நாஞ்செய்த பாவங்க ளானவே. 10

திருச்சிற்றம்பலம்
*****

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

பரிந்த சுற்றமும் மற்றுவன் துணையும்
பலரும் கண்டழு தெழஉயிர் உடலைப்
பிரிந்து போம்இது நிச்சயம் அறிந்தால்
பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்ந்து
கருந்தடங் கண்ணி பங்கனை உயிரைக்
கால காலனைக் கடவுளை விரும்பிச்
செருந்தி பொன்மலர் திருத்தினை நகருள்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.



வாழ்வாவது மாயம்இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறம் செய்மின்தடங் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக் கேதாரமெ னீரே.

மணமென மகிழ்வர் முன்னே மக்கள்தாய் தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவர் பேர்த்தே பிறவியை வேண்டேன் நாயேன்
பணையிடைச் சோலை தோறும் பைம்பொழில் விளாகத் தெங்கள்
அணைவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பனே அஞ்சி னேனே.

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே
மனனேநீ வாழுநாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட்கொள்வான்
கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும்
எரியகலும் கரியபாம்பும்
பிடித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாமன்றே.

## திருநொடித்தான்மலை

### (திருக்கைலாய மலை)

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தா னதறிந்துதன் பொன்னடிக்கே
நானெனை பாடலந்தோ நாயினேனைப் பொருப்படுத்து
வானெனை வந்தெதிர்கொள்ள மத்தயானை யருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை யுத்தமனே.

ஆனை யுரித்தபகை யடியேனொடு மீழக்கொலோ
ஊனை யுயிர்வெருட்டி யொள்ளியானை நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர் வலஞ்செய்தெனை ஏறவைக்க
ஆனை யருள்புரிந்தான் நொடித்தான்மலை யுத்தமனே.

மந்திர மொன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசேசெயுந் தொண்டனெனை
அந்தர மால்விசும்பில் அழகானை யருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித்தான்மலை யுத்தமனே.

வாழ்வை உகந்தநெஞ்சே மடவார்தங்கள் வல்வினைப்பட்டு
ஆழ முகந்தென்னை யதுமாற்றி அமரரெல்லாம்
கூழ அருள்புரிந்து தொண்டனேன்பர மல்லதொரு
வேழ மருள்புரிந்தான் நொடித்தான்மலை யுத்தமனே.

மண்ணுலக கிற்பிறந்து நும்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல் தொண்டனேன் இன்று கண்டொழிந்தேன்
விண்ணுலக கத்தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை யுத்தமனே.

அஞ்சினை ஒன்றிநின்று அலர்கொண்டடி சேர்வறியா
வஞ்சனை என்மனமே வைகிவானநன் னாடர்முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துப் தொண்டனேன்பர மல்லதொரு
வெஞ்சின ஆனைதந்தான் நொடித்தான்மலை யுத்தமனே.

நிலைகெட விண்அதிர நிலமெங்கும் அதிர்ந்தசைய
மலையிடை யானையேறி வழியேவரு வேனெதிரே
அலைகட லாலரையன் அலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ணம் நொடித்தான்மலை யுத்தமனே.

அரவொலி ஆகமங்கள் அறிவாரறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெனலாம்வந் தெதிர்திசைப்ப
வரமலி வாணண்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித்தான்மலை யுத்தமனே.

இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளென்னை மத்தயானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவ ரிவனாரென எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்தான்மலை யுத்தமனே.

ஊழிதோ றூழிமுற்று முயர்பொன்நொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவைநாவல வூரன்சொன்ன
ஏழிசை யின் தமிழா லிசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா அஞ்சையப்பர்க் கறிவிப்பதே.

திருச்சிற்றம்பலம்



## மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றி
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனிஎன்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே.

போற்றி ஓம் நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றி ஓம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றி ஓம் நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றி ஓம் நமச்சிவாய சயசய போற்றி போற்றி.

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்கு
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே.

பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும்
பொழுகிய பொய்க்கூரை
இத்தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடல்
சுழித்தலைப் படுவேனை
முத்து மாமணி மாணிக்க வயிரத்த
பவளத்தின் முழுச்சோதி
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டேனே.

# கோயில் மூத்த திருப்பதிகம்

**(அனாதியாகிய சற்காரியம்)**

உடையா ளுன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவு ளிருவீரும்
இருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும்மரு
ளைப்புரி யாய்பொன் னம்பத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

முன்னின் றாண்டாய் எனைமுன்னம்
யானும் அதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன்
பிற்பட் டொழிந்தேன் பெம்மானே
என்னின் றருளி வரநின்று
போந்தி டென்னா விடி லடியார்
உன்னின் றிவனார் என்னாரோ
பொன்னம் பலக்கூத் துகந்தானே.

உகந்தா னேயன் புடையடிமைக்கு
உருகா வுள்ளது உணர்விலியேன்
சகம்தா னறிய முறையிட்டால்
தக்க வாறன் றென்னாரோ
மகந்தான் செய்து வழிவந்தார்
வாழ வாழ்ந்தா யடியேற்குன்
முகந்தான் தாரா விடின்முடிவேன்
பொன்னம் பலத்தெம் முழுமுதலே.

முழுமுத லேயைம் புலனுக்கும்
மூவர்க் குமென்ற னுக்கும்
வழிமுத லேநின் பழவடி
யார்தி ரள்வான் குழுமிக்
கெழுமுத லேயருள் தந்திருக்க
இரங் கும்கொல் லோவென்று
அழுமது வேயன்றி மற்றென்
செய்கேன் பொன்னம் பலத்தரசே.



அரைசே பொன்னம் பலத்தாடும்
அமுதே யென்றுன் உருள்நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல்
ஏசறி றிருந்தே வேசற்றேன்
கரைசே ரடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்து னடியேன்பால்
பிரைசேர் பாலின் நெயடபோலப்
பேசா திருந்தால் ஏசாரோ.

ஏசா நிற்ப ரென்னை யுனக்
கடியா னென்று பிறரெல்லாம்
பேசா நிறபர் யான்தானும்
பேணா நிற்பன் நின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்கும்
திருவோ லக்கம் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடும்
எந்தா யினித்தான் இரங்காயே.

இரங்கும் தமக்கம்பலக் கூத்தன்
என்றென் றேமாந் திருப்பேனை
அருங்கற் பனைகற் பித்தாண்டாய்
ஆள்வா ரிலிமா டாவேனோ
நெருங்கு மடியார் களும்நீயும்
நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரவெங்கள்
வாழ்வே வாவென் றருளாயே.

அருளா தொழிந்தா லடியேனை
அஞ்சே லென்பா ராரிங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட
பொன்னே பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து
வருந்து வேனை வாவென்றுன்
தெருளார் கூட்டம் காட்டாயேல்
செத்தே போனால் சிரியாரோ.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடும்
தலைவா வென்பா ரவர்முன்னே
நரிப்பாய் நாயே னிருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே.

நல்கா தொழியான் நமக்கென்றுன்
நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா
வணங்கா மனத்தால் நினைந்துருகிப்
பல்கா லுன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்குமுயிர்க் கிரங்கி
அருளா யென்னை யுடையானே.

திருச்சிற்றம்பலம்

▲▲▲▲▲▲▲

## திருவிசைப்பா

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை என்றால்
அஞ்சலென் றருள்செய்வான் கோயில்
கைவரும் பழனம் குழைத்தசெஞ் சாலிக்
கடைசியர் களைதரு நீலம்
செய்வரம் பரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

அறிவும் மிக்கநல் நாணமும் நிறைமையும் ஆசையும் இங்குள்ள
உறவும் பெற்றநற் றாயொடு தந்தையும் உடன்பிறந் தவரோடும்
பிரிய விட்டுனை அடைந்தனன் ஏன்றுகொள் பெரும்பற்றப் புலியூரின்
மறைகள் நான்கும் கொண் டந்தணர் ஏத்தநன் மாநடம் மகிழ்வோனே.



## திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன் சீர்
அடியார் அடிநாய் செப்புரை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்
தாண்டுகொண் டாருயிர் மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனேஎன்று
பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டஅர சமர்ந்திருந்தார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

சென்று கண்ணுதல் திருமுன்பு தாழ்ந்துவீழ்ந் தெழுந்துசே ணிடைவிட்ட
கன்று கோவினைக் கண்டணைந் ததுஎனக் காதலின் விரைந்தெய்தி
நின்று போற்றிய தனிப்பெருந் தொண்டரை நேரிழை வலப்பாகத்(து)
ஒன்றும் மேனியர் ஊரனே வந்தனை என்றனர் உலகுய்ய.

எல்லா உலகும் ஆர்ப்பெடுப்ப எங்கும் மலர்மா ரிகள்பொழியப்
பல்லா யிரவர் கணநாதர் பாடி ஆடிக் களிபயிலச்
சொல்லார் மறைகள் துதிசெய்யச் சூழ்பல் லியங்கள் எழச்சைவ
நல்லா றோங்க நாயகமாம் நங்கள் பெருமான் தொழுதணைந்தார்.

# திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

சிவனரு ளாற்சிலர் தேவரு மாவர்
சிவனரு ளாற்சிலர் தெய்வத்தோ டொப்பர்
சிவனரு ளால்வினை சேரகி லாமை
சிவனருள் கூறிலச் சிவலோக மாமே.

மானுட ராக்கை வடிவு சிலவிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
மானுட ராக்கை வடிவு சதாசிவம்
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே.

சிவனோடொக் குந்தெய்வந் தேடினு மில்லை
அவனோடொப் பாரிங்கு யாவரு மில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பதமே.

திருச்சிற்றம்பலம்

▲▲▲▲▲▲▲



# திருப்புகழ்

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம்வைக்க
அறியாத சடகசட முடமட்டி பவவினையி லேசனித்த
தமியன் மிடியால் மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசய மநேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழக திருவேரகத்தின் முருகோனே.

## திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்

பேராதரிக்கும் அடியவர்தம்
பிறப்பை ஒழித்து பெருவாழ்வும்
பேறும் கொடுக்கவரும்
பிள்ளைப் பெருமான் என்னும் பேராளா
சேராநிருதர் குலகலகா
சேவற் கொடியாய் திருச்செந்தூர்
தேவாதேவர் சிறைமீட்ட
செல்வாஎன்று உன் திருமுகத்தை
பாரா மகிழ்ந்து முலைத் தாயர்
பரவிப்புகழ்ந்து விருப்புடன் அப்
பாவாவா என்று உனைப் போற்றி
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாராதிருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளரும் களபகுரும்பைமுலை
வள்ளிகணவா வருகவே

## கந்தரநுபூதி

வளைபட்டகை மாதொடு மக்களெனும்
தளைபட்டழியத் தகுமோ தகுமோ
கிளைபட்டெழுசூ ருரமும் கிரியும்
தொளைபட்டுருவத் தொடுவே லவனே.

கார்மாமிசை காலன்வரில் கலபத்
தேர்மாமிசைவந் ததெிரப் படுவாய்
தார்மார்பவலா ரிதலாரி யெனும்
சூர்மாமடியத் தொடுவே லவனே

கூகாவெனவென் கிளைகூ டியழப்
போகாவகைமெய்ப் பொருள்பே சியவா
நாகாசலவே லவநா லுகவித்
யாகாசுரலோ கசிகா மணியே.

சாகாதெனையே சரணங் களிலே
காகாநமனார் கலகம் செயுநாள்
வாகாமுருகா மயில்வா கனனே
யோகாசிவஞா னொபதே சிகனே

## பட்டினத்தார் பாடல்கள்

என்பெற்ற தாயாரும் என்னைப் பிணமென் றிகழ்ந்து விட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பி விட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தார்
உன்பற் றொழிய ஒருபற்று மில்லை உடையவனே

தாயாரும் சுற்றமும் பெண்டிரும் கைவிட்டுத் தாழ்ந்திடுநாள்
நீயாரு நானார் எனப்பகர் வாரந்த நேரத்திலே
நோயோடும் வந்து குடிகொள்வ ரேகொண்ட நோயும்ஒரு
பாயாரும் நீயுமல் லாற்பின்னை ஏதுநட் பாமுடலே.



## பட்டினத்தார் – உடற்கூற்று வண்ணம்

ஒருமட மாதும் ஒருவனு மாகி
இன்பசு கந்தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறுசு ரோணித மீது கலந்து
பனியிலொர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும வரும்பு கமடமி தென்று
பார்வை மெய்வாய்செவி கால்கைக ளென்ற
உருவமு மாகி உயிர்வளர் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரம கன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளு மறிந்து
மகளிர்கள் சேனை தரவணை ஆடை
மண்பட உந்தி உதைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை அமுதம் அருந்தி
ஓரறி வீரறி வாகி வளர்ந்து
ஒளி நகையூறல் இளமட வாரும்
உவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியி லிருந்து மழலை மொழிந்து
வாஇரு போஎன நாமம் விளம்ப
உடைமணி ஆடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களொ டுண்டு
தெருவி லிருந்து புழுதி யளைந்து
தேடிய பாலரொ டோடி நடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே
உயர்தரு ஞான குருஉப தேசம்
முத்தமி ழின்கலை யும்கரை கண்டு
வளர்பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதி னாறு பிராயமும் வந்து
மயிர்முடி கோதி அறுபத நீல
வண்டிமிர் தண்தொடை கொண்டை புனைந்து
மணிபொன் இலங்கு பணிகள் அணிந்து

மாகதர் போகதர் கூடி வணங்க
மதன சொரூபன் இவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய எறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு
மனது பொறாமல் அவர்பிற கோடி
மங்கல செங்கல சம்திகழ் கொங்கை
மருவ மயங்கி இதழமு துண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கி
ஒருமுத லாகி முது பொருளாய்
இருந்த தனங்களும் வம்பில் இழந்து
மதன சுகந்த விதனமி தென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து
வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்திரு கண்கள் இருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாத விரோத குரோத மடைந்து
செங்கையிலினோர் தடியுமாகியே
வருவது போவ தொருமுது கூனும்
மந்தியெ னும்படி குந்தி நடந்து
மதியும் அழிந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல் விடாமல் மொழிந்து
துயில் வருநேரம் இருமல் பொறாது
தொண்டையும் நெஞ்சமு லர்ந்து வறண்டு
துகிலு மிழந்து சுணையு மிழந்து
தோகையர் பாலகர் கோரணி கொண்டு
கலியுக மீதில் இவர் மரியாதை
கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச
கலகல வென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து
தெளிவு மிராமல் உரைதடு மாறி
சிந்தையும் நெஞ்சமும் உலைந்து மருண்டு
திடமும் உலைந்து மிகவும் அலைந்து
தேறிநல் ஆதர வேதென நொந்து
மறையவன் வேதன் எழுதிய வாறு



வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனியென கண்டம் இனியென தொந்தம்
ஏதினி வாழ்வு நிலாதினி நின்ற
கடன்முறை பேசும் என உரைநா
வுறங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி ஒழுகிட வந்து
பூதமும் நாலு சுவாசமும் நின்று
நெஞ்சுதடுமாறி வருநேரமே
வளர்பிறை போல எயிறும் உரோம
மும்சடை யும்சிறு குஞ்சியும் மிஞ்ச
மனதும் இருண்ட வடிவும் இலங்க
மாமலை போல்யம தூதர்கள் வந்து
வலைகொடு வீசி உயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரே இவர் கால மறிந்து
பழையவர் காணும் எனும் அயலார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்தர்
இடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியும் என்று
பலரையும் ஏவி முதியவர் தாம்
இருந்த சவம்கழு வும்சிலர் என்று
பணிதுகில் தொங்கல் களபம் அணிந்து
பாவகமே செய்து நாறும் உடம்பை
வரிசை கெடாமல் எடுமென ஓடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை அடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிடை மூடி அழல்கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
உருகி எலும்பு கருகி அடங்கி
ஓர்பிடி நீறும் இலாத உடம்பை
நம்பும்அடியேனை இனிஆளுமே.

## குரு நமச்சிவாயர் அருளிய நமச்சிவாய மாலை

மந்திர நமச்சி வாய மாலைநான் செப்பு தற்குக்
கந்தவேள் தனக்கு மூத்த கணபதி காப்புத் தானே.

அறைமறை அயனும் மாலும் அமரரும் முனிவர் தாமும்
முறைமுறை வணங்கி ஏத்தும் முதல்வனே நமச்சி வாய.

ஆதியாய் வேதம் நான்காய் அடிமுடி தெரியா வண்ணம்
சோதியாய் நிறைவாய் நின்ற துணைவனே நமச்சி வாய.

இணையடி தேடிக் காணா ஏழுல களந்த மாயன்
கணையதா எயின்மூன் றெய்த கடவுளே நமச்சி வாய.

ஈட்டிய பொருள்போல் உன்றன் இணையடி பணிவார் துன்பம்
வாட்டிய செம்பொன் மேனி வள்ளலே நமச்சி வாய.

உமையொரு பாகம் வைத்த உம்பர்கள் தம்பி ரானே
அமைதரு மணியே முத்தே அண்ணலே நமச்சி வாய.

ஊனுமாய் உயிரும் ஆகி உள்ளுமாய் புறம்பும் ஆகித்
தாணுவாய்ச் சகத்துக் கெல்லாம் தந்தையாம் நமச்சி வாய.

எழுபிறப் பதனான் மாழ்கும் என்னுயிர்க் கிரங்கி வந்து
பழுதற ஆண்டு கொள்ளும் பரமனே நமச்சி வாய.

ஏடவிழ் கோதை மாதர் இளமுலை மயக்கப் பட்டு
நீடுதல் ஒழிக்க வல்ல நிமலனே நமச்சி வாய.

ஐயமேற் றுண்டாய் பாதம் அன்பிலேன் தலைமேல் வைத்த
செய்யனே வானோர் போற்றும் தேவனே நமச்சி வாய.



ஒன்பது வாயிற் கூட்டில் ஒடுங்குயிர் உய்யும் வண்ணம்
பொன்மொழி மலர்த்தாள் காட்டும் புனிதனே நமச்சி வாய.

ஓம்எனும் எழுத்தின் உள்ளே ஒளியதாய் விளங்கு கின்ற
வாமனே கருணை நல்கும் வள்ளலே நமச்சி வாய.

ஔவியம் பேசா வண்ணம் அடிமையைத் தடுத்தாட் கொள்ளும்
திவ்விய மணியே முத்தே தேவனே நமச்சி வாய.

அக்கினைப் பூண்டு கொண்டே அரியவெண் ணீறு பூசும்
சொக்கனே செக்கர் மேனித் தூயனே நமச்சி வாய.

கம்பமார் களிறு ரித்த கச்சிஏ கம்பா செம்பொன்
அம்பலத் தாடு கின்ற அண்ணலே நமச்சி வாய.

ஙகரம் போல் வளைந்து முன்று நாயினேன் உணவு தேடும்
பகரொணா இன்னல் தீர்க்கும் பரமனே நமச்சி வாய.

சத்தியும் சிவமும் ஆகித் தாணுவாய்ச் சகத்துக் கெல்லாம்
முத்தியே அளிப்பாய் ஆதி முதல்வனே நமச்சி வாய.

ஞமனுடன் இந்தி ரற்கும் நாரணற் கார ணற்கும்
சமனுற முதலாய் நின்ற தாணுவே நமச்சி வாய.

இடவிய கபாலம் ஏந்தி ஏழிரண் டுலகம் எல்லாம்
தடவியும் காண ஒண்ணாச் சங்கரா நமச்சி வாய.

இணங்கிய கமலப் பொற்றாள் இருவரும் ஏத்தி நின்று
வணங்கஅம் பலத்துள் ஆடும் வானவா நமச்சி வாய.

தண்தமிழ் முனிவன் தன்னைச் சமமுறத் தென்பால் ஏவும்
அண்டரோ டயன்மால் காணா ஆதியே நமச்சி வாய.

நஞ்சணி கண்டத் தானே நதிமதிச் சடையி னானே
கொஞ்சுபச் சிளம்பெண் பாகம் கொண்டவா நமச்சி வாய.

பண்டுல களந்த மாலும் பங்கயத் தயனும் தேடிக்
கொண்டுசென் றறிய ஒண்ணாக் குரவனே நமச்சி வாய.

மங்கைஓர் பாகம் வைத்து வளர்பிறை முடிமேல் வைத்துச்
செங்கையில் மழுமான் வைத்த தேவனே நமச்சி வாய.

இயக்கரும் முனிவர் தாமும் இருகரம் குவித்து நின்று
வியக்கஅம் பலத்தில் ஆடும் விமலனே நமச்சி வாய.

அரகர சிவனே என்றும் அம்பலத் தாடி என்றும்
பரவுவார் துயரம் தீர்க்கும் பரமனே நமச்சி வாய.

இலவிதழ் மடவார் தங்கள் ஏவலுக் குரியன் ஆகி
அலமரும் என்னை ஆண்ட அமலனே நமச்சி வாய.

வளமுறு மங்கை தன்னை மற்றிடப் பாகம் வைத்தே
ஒளிமதிக் கீற்றைச் சூடும் ஒருவனே நமச்சி வாய.

அழகிய முருக னுக்கோர் ஆறுமா முகமும் கூர்மை
பழகிய வேலும் ஈந்த பரமனே நமச்சி வாய.

இளமையும் மூப்பும் இல்லா இறைவனே எம்பி ரானே
வளமையாம் கருணை மோன வள்ளலே நமச்சி வாய.

அறவனே பாதம் தேடி அன்றிரு வோரும் காணா
இறைவனே என்னைக் காக்கும் ஈசனே நமச்சி வாய.

அனந்தலில் நின்தாள் போற்றி அர்ச்சிக்கும் அடியார் தங்கள்
இனந்தனில் என்னை வைப்பாய் ஈசனே நமச்சி வாய.



கரியுரி அதனைப் போர்த்துக் கபாலமும் கையில் ஏந்தித்
திரிபுர தகனம் செய்த தேவனே நமச்சி வாய.

காலனை உதைத்த காலா காமனை எரித்த கண்ணா
பாலனைக் கறிய தாக்கும் பரமனே நமச்சி வாய.

கிளிமொழி அமுதச் செவ்வாய்க் கெவுரியைப் பாகம் வைத்த
ஒளிமதிச் சடையி னானே ஒருவனே நமச்சி வாய.

கீண்டுவெற் பெடுத்த வீரக் கேடிலா அரக்கன் தன்னை
மாண்டுக விரலால் ஊன்றும் வள்ளலே நமச்சி வாய.

குழைகுமிழ் அடரும் கண்ணாள் கோதையைப் பிரிந்த போது
பிழைசெயும் அதனைக் காய்ந்த பிஞ்ஞகா நமச்சி வாய.

கூவிளம் அறுகு தும்பை கொன்றைவெள் ளெருக்கூ மத்தை
மேவிய சடையி னானே வித்தகா நமச்சி வாய.

கெங்கையைச் சடைமேல் வைத்துக் கெவுரியைப் பாகம் வைத்தல்
அங்கணா நீதியோ சொல் ஐயனே நமச்சி வாய.

கேசவன் வணங்கிக் கண்ணாம் கேழ்கிளர் கஞ்சம் சூட்ட
ஆசியோ டாழி ஈந்த அமலனே நமச்சி வாய.

கைச்சிலை மேரு வாகக் கரியமால் பகழி ஆக
உச்சிதப் புவித்தேர் ஏறும் ஒருவனே நமச்சி வாய.

கொற்றவன் தனக்கு முன்னே குதிரையில் ஏறிக் காட்டிப்
பொற்றுகில் கோலால் கொள்ளும் பூரணா நமச்சி வாய.

கோணமா மலையில் வாழும் கோதிலா ஆதி யேநீ
ஆணல்லை பெண்ணும் அல்லை அத்தனே நமச்சி வாய.

சந்திரன் விளங்கும் சென்னித் தலைவனே தம்பி ரானே
இந்திரன் இமையோர் போற்றும் இறைவனே நமச்சி வாய.

சாந்தணி முலையாள் தன்னைத் தண்புனல் எனப்பேர் மாற்றி
ஏந்துசெஞ் சடைஎம் மானே இறைவனே நமச்சி வாய.

சிரமது கையில் ஏந்திச் சீரிய முனிவர் தங்கள்
விரகினை அழித்த மேரு வில்லியே நமச்சி வாய.

சீதள கமல வாவித் திருநாவ லூரன் தன்னைச்
சாதனம் காட்டி ஆண்ட தாணுவே நமச்சி வாய.

சுத்தவெண் ணீறு பூசிச் சுடலையில் நடனம் ஆடும்
அத்தனே ஆரூர் வாழும் அண்ணலே நமச்சி வாய.

சூரியன் துயரம் தீர்த்தாய் தோன்றிமுப் புரத்தைச் சுட்டாய்
ஆரிய வெள்ளி வெற்பின் அத்தனே நமச்சி வாய.

செஞ்சிலை கையில் ஏந்திச் சிரித்துமுப் புரம்எ ரித்தாய்
தஞ்சமென் றுனை அடைந்தேன் தாணுவே நமச்சி வாய.

சேதன அடியா ரோடு திருப்பெருந் துறையில் வந்து
வாதவூ ரரசை ஆண்ட வரதனே நமச்சி வாய.

சைவனே ஐம்பு லங்கள் தமைமனம் சாரா வண்ணம்
கைவரம் அருள வேண்டும் கடவுளே நமச்சி வாய.

சொரிமலர்க் கொன்றை தும்பை சொல்லிய அறுகு தாளி
விரிமலர்ச் சடையாய் வெள்ளி வெற்பனே நமச்சி வாய.

தந்தையும் தாயும் இல்லாத் தாணுவே ஆண்பெண் அல்லாய்
இந்திரன் அயன்மால் போற்றும் இறைவனே நமச்சி வாய.



தாதவிழ் கொன்றை தும்பை சங்கொடு தலையும் கொண்ட
நாதனே வேதம் ஓதும் நம்பனே நமச்சி வாய.

திரிபுரம் எரித்த மூர்த்தி தென்னவன் முன்னே முன்னாள்
நரிதனைப் பரிய தாக்கும் நம்பனே நமச்சி வாய.

தீதிலா வாத வூரர் செய்கைகண் டுளம கிழ்ந்த
நாதனே பரனே வானோர் நண்பனே நமச்சி வாய.

தூதுசூந் தரற்காச் சென்ற சோலைசூழ் ஆரூர் ஐயா
ஆதியே அரனே வெள்ளி அசலனே நமச்சி வாய.

தென்னவ னாகக் கூடல் சேர்ந்துசெங் கோல்செ லுத்தி
அந்நகர் தன்னை ஆண்ட அமலனே நமச்சி வாய.

தேடியே இருவர் காணாத் திருவடி மனத்துள் யாரும்
நாடியே வணங்க நின்ற நம்பனே நமச்சி வாய.

தையலோர் பாகம் வைத்துச் சடையினில் கங்கை வைத்த
ஐயனே ஆரூர் வாழும் அண்ணலே நமச்சி வாய.

தொல்லுல கெல்லாம் போற்றும் சோதியே சூல பாணி
வில்லென மேரு வாங்கும் வித்தகா நமச்சி வாய.

தோத்திரம் செய்மா யற்குச் சுடரொளி ஆழி ஈந்த
ஆத்தனே அடியர் அன்பிற் களியனே நமச்சி வாய.

நஞ்சினை அருந்தி மாயன் நான்முகன் முதலோர் நாண
அஞ்செழுத் துருவ மான அத்தனே நமச்சி வாய.

நாரணன் அலரோன் இந்திரன் நாடிமுன் வணங்கி நிற்ப
ஆரணம் ஓது கின்ற ஆதியே நமச்சி வாய.

நிற்பவர் நெறியை நோக்கி நெஞ்சைவிட் டகலா தானே
கற்பனை கடந்த சோதிக் கடவுளே நமச்சி வாய.

நீறணி மேனி யானே நிமலனே அமரர் கோவே
ஆறணி சடையி னானே அண்ணலே நமச்சி வாய.

நுண்ணிடை மாது பாகா நோக்குவார் தம்மை நோக்கும்
கண்ணுதற் பரனே தேவா கடவுளே நமச்சி வாய.

நூபுர பதமா தோடு நுவலரும் சபையில் ஆடும்
மாபுரத் தவர்கள் காலா வானவா நமச்சி வாய.

நெஞ்சக மலரில் உன்னை நினைவுற நினைந்த பேருக்(கு)
அஞ்சல்என் றருளிச் செய்யும் அண்ணலே நமச்சி வாய.

நேத்திரம் தன்னால் வேளை நெருப்பெழச் சுட்டு விட்டாய்
சாத்திர முனிவோர் போற்றும் தாணுவே நமச்சி வாய.

நொந்தவர் இளைத்தோர் தம்மை நொடியள வினில்வாழ் விக்கும்
கந்தரம் கறுத்த மூர்த்தி கடவளே நமச்சி வாய.

நோக்கமூன் றுடையாய் என்னை நோக்கியே துரியா தீதத்
தூக்கத்தில் வைப்ப தென்றோ சொல்லுவை நமச்சி வாய.

நௌவியை ஏந்தும் கையால் நயமுடன் அடியார் தங்கள்
வெவ்வினை எல்லாம் தீர்க்கும் விமலனே நமச்சி வாய.

பத்தராய் பணிவார் தம்மை பதம் கொடுத் தாளும் ஐயா
சுத்தனே வேதம் சொன்ன துணைவனே நமச்சி வாய.

பாடுவார் மூவர் தம்மைப் பதங்கொடுத் தாண்ட மூர்த்தி
தேடுவார் தேடு கின்ற செம்பொனே நமச்சி வாய.



பிறையணி சடையி னானே பிஞ்ஞகா அடியார்க் கெல்லாம்
துறைவற வாழ்வ ளிக்கும் கொற்றவா நமச்சி வாய.

பீடுறப் பூசிப் பார்தம் பெருவினை அறுக்கும் மூர்த்தி
ஆடல்சேர் எருதில் ஏறும் அண்ணலே நமச்சி வாய.

புகலூறும் கல்லால் அன்பு பூண்டெறி சாக்கி யர்க்குத்
தகவுற முத்தி நல்கும் தாணுவே நமச்சி வாய.

பூசுவெண் ணீறு பொங்கப் பொருவிலா அம்மை காண
நேசமோ டாலங் காட்டில் நிருத்தம்செய் நமச்சி வாய.

பெண்ணமு தனையார் நாணும் பெட்புறு வளையும் தூசும்
எண்ணுறு பலியாக் கொண்ட இறைவனே நமச்சி வாய.

பேயுடன் காட்டில் ஆடும் பிஞ்ஞகா பெரியோர் தங்கள்
தூயநன் மனத்து ளானே சுத்தனே நமச்சி வாய.

பையர வணையில் தங்கும் பாரளந் தோற்குப் பாதி
மெய்யளித் தருள்கூர்ந் திட்ட விண்ணவா நமச்சி வாய.

பொசியுறு தேம்பூஞ் சோலைப் புகலியிற் பிள்ளை யார்க்குச்
சகியொளி முத்தின் பந்தர் தந்தவா நமச்சி வாய.

போதக மாகி வந்த புன்மைசேர் அசுரன் தன்னை
நோதக உரித்துப் போர்த்த நுண்ணியா நமச்சி வாய.

பௌவத்தில் சிலையோ டாழும் படிஅமண் செய்ய அப்பர்க்(கு)
எவ்வம தகற்றிப் பேற தீந்தவா நமச்சி வாய.

மறுவறும் ஆதி சைவ மரபிற்சுந் தரற்குத் தூதாய்ச்
செறிநிசி பரவை வாயில் சென்றவா நமச்சி வாய.

மான்மழுக் கையில் ஏந்தி வன்னியோர் பாகம் வைத்தே
ஆன்முது கேறும் சோதி ஐயனே நமச்சி வாய.

மிடற்றினில் காள கூட விடத்தினைக் கறுக்க வைத்தாய்
நடத்தினில் விருப்பம் வைத்தாய் நம்பனே நமச்சி வாய.

மீனென வந்த மாயன் விழியினை இடந்து சாத்த
ஆனதோர் மேனி நல்கும் அண்ணலே நமச்சி வாய.

முன்னமே பிரமன் தன்னை முனிந்துஓர் தலைய றுத்தாய்
என்னைவந் தாண்டு கொள்வாய் ஈசனே நமச்சி வாய.

மூர்க்கனாம் தக்கன் வேள்வி முன்புசென் றழித்து வெற்றி
மார்க்கம்கண் டிட்ட சோதி வானவா நமச்சி வாய.

மெலிவிலாத் தவத்தோர் கோபம் மேலுற முன்னாள் விட்ட
புலிதனை உரித்துச் சாத்தும் புண்ணியா நமச்சி வாய.

மேயபேர் உணர்விற்கெட்டா வெளியதாய் அணுவும் ஆகி
ஆயசிற் சொரூப மான அண்ணலே நமச்சி வாய.

மையுறு குழலாள் கூடல் மங்கையர்க் கரசி யார்முன்
செய்குறு பணிக்கு வந்த தேவனே நமச்சி வாய.

மொழிதரு நால்வர் தங்கள் முதுமறைத் தமிழ்ப்பா மாலை
ஒழிவின்றிச் சூட்டிக் கொள்ளும் ஒருவனே நமச்சி வாய.

மோகினி வடிவம் கொண்ட முகில்வண்ணன் தன்னைச் சேர்ந்து
சோகமில் ஐய னாரைத் தோற்றியோய் நமச்சி வாய.

மௌவலங் குழலார் மோக வலையறுத் துயர்சித் தாந்தச்
செவ்வையாம் முத்தி என்று சித்திக்கும் நமச்சி வாய.



உ
விவமயம்

# ஸ்ரீமத் அருணாசலேஸ்வர தேவஸ்தான அருள்மிகு ஸ்ரீதேவி ஸ்ரீ காதம்பரி அம்பிகை சண்டிஹோம பூர்த்திப் பொன்னூசல் பதிகம்

## கணபதி காப்பு

சீர்பூத்த ஈழவள
நாட்டின் மேவும்
சிவனொளி பாதமலை
தான்பிறந்த களனிமகள்
கார்பூத்த இந்துமா
கடலோடு சங்கமிக்கும்
கவின்மிளிர் முகத்துவாரப்
பதியில் அருள் சுரக்கும்

பேர்பூத்த அருணாசலா்
பெருமானின் சந்நிதியில்
பெருமையுடன் அரசோச்சும்
ஆதிகாளி காதம்பரி
ஏர்பூத்த பொன்னூசல்
பதிகமது இனிது பாட
ஏகதந்த கணபதியார்
இணையடிகள் துணையதாமே.

தூர்முகனாம் கொடுமரக்கன்
தூயவேதந் தனைத்திருட
தரணியிலே வேள்வி இன்றி
மழையின்றில் பயிரின்றி
பார்எலாம் பசியால்வாட
பக்தர்ரிஷி முனிதேவர்

பராசக்தி தனைத்துதிக்க
ஆயிரமா யிரங்கண்கள்
சீர்மிகு கரங்களிலே
காய்பயிர் பச்சையுடன்
அவதரித்து அடியார்துயர்
கண்டுகண் ணீர்வடித்தாய்
கார்மிகு மழையாகி
கண்ணீர்ரோட காசினியில்
வளம்சுரப்ப பஞ்சம்நீர்
பாரெலாம் உனைத்துதிக்க
ஏர்மிகு கொழும்பூர்
முகத்துவாரப் பதியமர்ந்தாய்
ஏகாம்பரியே சாகம்பரியே
இன்பமுடன் ஆடீர்ஊஞ்சல்

பல்லாயிரம் கண்கொண்ட
பாங்கினாள் சதாட்சிஎன்றும்
பசிதீர்க்கும் பயர்ஏந்தி
வந்ததனால் சாகம்பரி என்றும்
வல்லதுர் முகனவனை
வதைத்தமையால் துர்க்கை என்றும்
ஏககாலம் திருநாமம்
மூன்றும் பெற்றாய்

நல்லரசன் அரிச்சந்திரன்
றாடிழந்து சுடலைகாக்க
நயமுடனே உனைதுதிக்க
நாடளித்துக் குலங்காத்தாய்
எல்லையிலா அருளுடையாய்
கொழும்பு நகர் முகத்துவாரம்
இனிதமர்ந்த சாகம்பரீ
அம்பிகையே ஆடீர் ஊஞ்சல்



ஆனைக்குட்டி சித்தர்எனும்
அடியனவன் அடங்கிநின்ற
அற்புதத்தின் மேலெழுந்த
அன்பினால் அவர்துதித்த
ஞானமிளிர் சிவனார்க்கு
நல்லதொரு ஆலயத்தை
நயமுடனே பொன்னம்பல
அருணாசலம் எடுப்ப
தீனர்துயர் தீர்பதற்கு
திக்கெலாம் ஆடும்சக்தி
சாகம்பரீ அம்பிகையால்
சார்ந்தனளே இப்பதியில்
கானமுயர் கடலோசை
கொழும்பூர் முகத்துவாரம்
காக்கவந்த தேவியரே
களிப்புடனே ஆடீர் ஊஞ்சல்

அருணாச லேஸ்வரர்க்கு
ஆத்மார்தப் பூஜைசெய்த
அந்தணர்தம் சிரோன்மணியார்
ஐயனவர் ஸ்ரீநிவாசர்
அருமையுடன் உனைஎன்றும்
உபாசிக்க அவர்மனத்தில்
எழுந்தருளி அருளுரைக்க
அதனிமித்தம் ஐயனவர்
பெருமையுடன் அன்னையுனைப்
பிரதிஷ்டை செய்துவைத்தார்
பக்தர்குலம் போடிகோடி
பாங்குடனே வழிபட்டார்
கருமைமிகு கடலோரம்
கொழும்பு முகத்துவாரம்
கருணைமழை பொழிமுகிலே
சாகம்பரீ ஆடிர் ஊஞ்சல்

ஆவணியில் பூர்வபிர
தமைமுதல் தசமிவரை
ஐயிரண்டு நாள்காளக
சண்டிஹோம பூசைசெய்ய
தேவருக்கும் காணரிய
திருக்கோலம் அவர்க்குகாட்டி
நவமியிலே உன்னடிக்கு
நலமாகத் தானழைத்தாய்
நவமருளும் சண்டிஹோம
நல்லடியார் நினைவாக
நாயகியே உனைத்துதிக்க
நாளும்தந்து அருள்சுரந்தாயே
தவநினைவு தருபவளே
கொழும்பு நகர் முகத்துவாரம்
தயாபரீயே சாகம்பரீ
தயவுதர ஆடீர் ஊஞ்சல்

சீராரும் பவளக்கால்
சிறந்திலங்கத் தான்நாட்டி
சிறப்புறும் மாணிக்க
விட்ட மது தான் பூட்டி
நீராரும் கடல்முத்து
நீண்டவடம் தான்கட்டி
நிறைசாக்த தத்துவங்கள்
பலகை ஆக்கி
வேராரும் வேதங்கள்
விரும்பிமிசைப் பாடலாக
மாநகர் கொழும்புநகர்
முகத்துவாரம் பதியில்
நாராயணன் தங்கை
சாகம்பரி அம்பிகையே
நல்லருள் புரிந்துநிதம்
ஆடீர் ஊஞ்சல்



ஆடிவரும் வைரவளை
ஆர்ப்ப ஆர்ப்ப
தொண்டர் குழாமெலாம்
தொழுதுநித மார்ப்ப
நாடிவாரும் கடலோசை
நயமாய் ஆர்ப்ப
நானிலத்து உயிர்களெலாம்
துதியில் ஆர்ப்ப
பாடக மெல்லோசையுடன்
பாதச் சிலம்பார்ப்ப
பராசக்தி காளியன்னை
பாரெங்கும் ஆர்ப்ப
நாடதனின் கொழும்புநகர்
சங்கமத்துக் காதம்பரி
நாயகியே அருளரசி
ஆடீர் ஊஞ்சல்

முத்தணியும் கொங்கையாட
மொய்குழலில் மாலையாட
மூக்குத்தி வைரஒளி
மூவுலகம் தான்ஆட
விதத்தகமாய் தோகடாட
விரும்பியங்கு நாகமாட
விளங்கு மேகலையுமாட
விரிந்தமணி மகுடமாட
சித்தமெலாம் சிவசக்தி
தன்னோடு ஆடஆட
செங்கமலத் திருப்பாதம்
திருவருளாய் கூடகூட
நித்தமுயர் முகத்துவார
சங்கமத்தில் நிலைத்தருளும்
நிமலியரே காதம்பரி
ஆடீர் ஊஞ்சல்

வையமெலாம் நின்கருணை
வேண்டிநிதம் அடியரெலாம்
வாழ்த்திசைத்து துதிபாட
வாணியடை மலருறையும்
தையலவள் திருமகளும்
மலைமகளும் தானாடி
தரணியிலே நவராத்திரி
தத்துவமே உயர்ந்தாட
பொய்யழிந்து மெய்யாடப்
புவனமெலாம் நலமாட
பொங்குமயர் செல்வமாட
பொன்னடிகள் தான்கூட
உய்யஅருள் சுரப்பதற்கு
சங்கமத்தில் அமர்ந்தவளே
சங்கரியே காதம்பரீ
ஆடீர் ஊஞ்சல்

ஆரணியே ஆதிமூல
காளியரே ஆடீர் ஊஞ்சல்
அடியார்கள் உளமெனும்
பீடமதில் எழுந்தருளி
பூரணியே புவனமெலாம்
புரந்தருள ஆடீர் ஊஞ்சல்
பொன்னரசி நாரணியே
புகழ்பூக்க ஆடீர் ஊஞ்சல்
காரணியே காரணங்கள்
கடந்தவளே ஆடீர் ஊஞ்சல்
கலியுகத்தில் மெய்யாய்நின்
தத்துவமே ஆடீர் ஊஞ்சல்
சீரணியும் முகத்துவார
அருணாச லேசுவர்
திருக் கோயில் காதம்பரி
ஆடீர் ஊஞ்சல்



ஆரணத்தின் உயிர்ப்பொருளே
ஆதார சக்திவாழி
அன்புடையார் நெஞ்சமெலாம்
அடிமைகொண்ட தாய்வாழி

பூரணத்தின் வடிவேவாழி
பொலிவருளும் திருவேவாழி
புதுமைதரு அருளே வாழி
போதமருள் குருவாக

காரணத்தின் நாயகியே
காளியம்ம வாழிவாழி
காரணங்கள் கடந்துநின்ற
காரணியே வாழி வாழி

நாரணார் சோதரியே
முகத்துவாரத் திருப்பதியின்
பொன்னூசல் ஆடிநீயும்
என்றென்றும் வாழிவாழி

## மங்களம்


அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதும் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கு மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத்தன்னா லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட்டு உண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுகட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மங்கும் உயிர்களுக்கு மங்களம்
மங்களம் ஜெய மங்களம் மங்களம் ஜெய மங்களம்.

## வாழ்த்து


துய்யதோர் மறைகளாலும் துதித்திடற் கரியசெவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க! சேவலும் மயிலும் வாழ்க!
வெய்யசூர் மார்புகீண்ட வேல்படை வாழ்க!
பொய்யில்சீர் அடியர் வாழ்க! வாழ்க இப்புவனம் எல்லாம்.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.






# நன்றி நவிலல்



எமது குடும்பத்தலைவர் திடீர் என மறைந்தபோது
எமக்கு அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும்,
ஆலய எஜமான் ஸ்ரீமான். மகாதேவா பாலகுமாரன்,
ஸ்ரீமதி பாலகுமாரன் அவர்கள் குடும்பத்தினருக்கும்,
உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும்
அன்னாரது ஈமக்கிரிகைகள், தசாகம் கிரஹயக்ஞம்
என்பவற்றில் கலந்து எமக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கும்,
அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும்,
இந் நினைவுமலரை மிகக்குறுகிய காலத்தில் அழகுற
அச்சிட்டு உதவிய பிரிலியன்ட் அச்சகத்தாருக்கும்
எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.



சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்

புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்

அல்லும் பகலும் தொழுமவர்க் கேயழி யாவரசுஞ்

செல்லும் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே.